# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 45/மா/2025
நாள் 17.02.2026

B. இரமேஷ்
சென்னை–91 --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை, உள்ளகரம், ராஜேஸ்வரி நகர், பிரதான சாலை, பிளாட் எண் 32 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B.ரமேஷ் என்பவரின் 27.11.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.11.2024 அன்று பெறப்பட்டு 45/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சென்னை, உள்ளகரம், ராஜேஸ்வரி நகர், பிரதான சாலை, பிளாட் எண் 32 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B.ரமேஷ் என்பவர் 27.11.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:

> “நான் மேற்படி முகவரியில் என் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் பெருநகர சென்னை மாநகராட்சி இணையதளம் மூலமாக சென்னை மாநகராட்சி மண்டலம் 14 சம்பந்தமாக ஐந்து புகார்கள் பதிவு செய்திருந்தேன். அதன் புகார் எண்கள் 2024–972SHT, 2024–643MCF, 2024–533HDD, 2024–639RFE, 2024–194GOM ஆகும். இதில் முதன் நான்கு புகார்கள் மண்டலம் 14 வார்டு 186 சம்பந்தப்பட்டது. புகார் எண் 2024–194GOM என்பது மண்டலம் 14 வார்டு 188 சம்பந்தப்பட்டது. மேற்படி என் புகார்களின் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் கீழ் பணிபுரியும் வார்டு 186 மற்றும் வார்டு 188 சம்பந்தப்பட்ட உதவி பொறியாளர்கள் இதுவரை நடவடிக்கை எடுக்க வேண்டிய கால அவகாசம் கடந்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் நிலுவையில் வைத்துள்ளார்கள். மேற்படி பெருநகர சென்னை மாநகராட்சி உதவி பொறியாளர்கள் சட்டப்படி என் புகார்களின் மீது உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காமல் கடமை தவறியுள்ளார்கள். இவர்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய பெருநகர சென்னை

மாநகராட்சி மண்டலம் 14ன் மண்டல அலுவலர் அவர்களும் கடமை தவறியுள்ளார். இதனால் நான் மிகுந்த மனவுளைச்சலுக்கும், மனவேதனைக்கும் ஆளாகியுள்ளேன். எனவே, மாண்பமை உள்ளாட்சி முறைமன்ற நடுவர் அவர்கள் தயவு செய்து மேற்படி நிகழ்வுகளை கவனத்தில் எடுத்துக் கொண்டு மேற்படி என் புகார்களின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் கடமை தவறிய பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலர் 14 மற்றும் உதவி பொறியாளர்கள் (வார்டு 186,188) ஆகியோர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறும், மேற்படி என்னுடைய இணையதள புகார்களில் காணப்படும் குறைகளை சரி செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறும் நீதியின் பெயரால் தங்களை நான் பிரார்த்திகிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனுவுடன் இணைத்தனுப்பியுள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் இணைய தளம் மூலம் அனுப்பிய மனுக்களில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

புகார் எண் 2024–972SHT

நான் வசிக்கும் ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை குண்டும் குழியுமாக உள்ளது உடனடியாக சீரமைக்கவும்.

புகார் எண் 2024–643MCF

ராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் மண் கொண்டு மூடப்பட்டுள்ளது. நடவடிக்கை வேண்டுகிறேன்.

புகார் எண் 2024–533HDD

சென்னை பெருநகராட்சி 14வது மண்டல அலுவலகம் அமைந்துள்ள புழுதிவாக்கம் பிரதான சாலை போக்குவரத்துக்கு லாயகற்று படுமோசமாக உள்ளது. நடவடிக்கை எடுக்காமல் தூங்கும் அதிகாரிகளுக்கு என் வாழ்த்துகள். இனியாவது நடவடிக்கை எடுக்கவும்.

புகார் எண்2024–639RFE

புதிதாக கடந்தாண்டு ராஜேஸ்வரி நகர் தெருவில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் முறையாக வாட்டம் பார்த்து கட்டப்படாமல் இதில் ஊழல் நடைபெற்றுள்ளதாக அறிகிறேன். மழைநீர் செல்லாமல் வடிகாலிலேயே தேங்கி நிற்கிறது. மழைநீர் வடியாமல் தெருவிலேயே நின்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளே பொறுப்பு. தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

புகார் எண் 2024–194GOM

மடிப்பாக்கம் கிருஷ்ணா நகர் விரிவு பகுதியில் குடியிருப்புகளுக்கு இடையே உள்ள பகுதிகளில் சாலை போடப்படாமல் உள்ளது. நடவடிக்கை தேவை.'' எனத் தெரிவித்துள்ளார்.

3. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 20.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

4. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 மண்டல அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு முகவரியிட்டு மனுதாரருக்கு நகலிட்ட தனது 29.04.2025 நாளிட்ட கடிதம் ம.அ.14 ந.க எண் அ10/1456/2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

| வ. எண் | குற்றச்சாட்டின் விவரங்கள் | குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளித்தல் |
|---|---|---|
| 1. | நான் வசிக்கும் ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை குண்டும் குழியுமாக உள்ளது உடனடியாக சீரமைக்கவும். | இராஜேஸ்வரி நகர் பகுதியில் உள்ள சாலைகள் அனைத்தும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்பம் கோரப்பட்டு விரைவில் புதிய தார் சாலை அமைக்கப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது |
| 2. | ராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் மண் கொண்டு மூடப்பட்டுள்ளது. நடவடிக்கை வேண்டுகிறேன். | இராஜேஸ்வரி நகரில் இரண்டாவது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மண் அகற்றப்பட்டு மழைநீர் செல்ல வழி செய்யப்பட்டுள்ளது. |
| 3. | சென்னை பெருநகராட்சி 14வது மண்டல அலுவலகம் அமைந்துள்ள புழுதிவாக்கம் பிரதான சாலை போக்குவரத்துக்கு லாயகற்று படுமோசமாக உள்ளது. நடவடிக்கை எடுக்காமல் தூங்கும் அதிகாரிகளுக்கு என் வாழ்த்துகள். இனியாவது நடவடிக்கை எடுக்கவும். | புழுதிவாக்கம் பிரதான சாலை புதிய சாலை அமைக்கப்பட்டுள்ளது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. |
| 4. | புதிதாக கடந்தாண்டு ராஜேஸ்வரி நகர் தெருவில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் முறையாக வாட்டம் பார்த்து கட்டப்படாமல் இதில் ஊழல் நடைபெற்றுள்ளதாக அறிகிறேன். மழைநீர் செல்லாமல் வடிகாலிலேயே தேங்கி நிற்கிறது. மழைநீர் வடியாமல் தெருவிலேயே நின்றால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளே பொறுப்பு. தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். | இராஜேஸ்வரி நகரில் கட்டப்பட்டுள்ள மழைநீர் கால்வாய் திட்ட ஆலோசனைகள் மூலம் முறையாக வாட்டம் வைத்து கோட்ட உதவி பொறியாளர் கண்காணிப்பில் கட்டப்பட்டது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. |

எனத் தெரிவித்துள்ளார்.

5. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 19.12.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6. மனுதாரர் 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தன்னுடைய 27.12.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

> "As per the above reference cited, I am to inform you that I am not able to attend the appeal hearing on 06.01.2026 due to some High Court Works. Hence, I request you to dispose my appeal petition on merits."

7. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் இளநிலை பொறியாளர் 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

“1) இராஜேஸ்வரி நகர் பகுதியில் உள்ள சாலைகள் அனைத்திற்கும் மதீப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. ஒப்பம் கோரப்பட்டு விரைவில் புதிய தார் சாலை அமைக்கப்படும்.

2) இராஜேஸ்வரி நகரில் இரண்டாவது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மண் அகற்றப்பட்டு மழைநீர் செல்ல வழி செய்யப்பட்டுள்ளது.

3) புழுதிவாக்கம் பிரதான சாலை புதிய சாலை அமைக்கப்பட்டுள்ளது.

4) இராஜேஸ்வரி நகரில் கட்டப்பட்டுள்ள மழைநீர் கால்வாய் திட்ட ஆலோசனைகள் மூலம் முறையாக வாட்டம் அமைத்து கோட்ட உதவி பொறியாளர் கண்காணிப்பில் கட்டப்பட்டுள்ளது.

மனுதாரர் புகாரில் கூறப்பட்டுள்ள அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டன என இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிந்து தெரிவித்துக் கொள்கிறேன்.”

8. பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 188–ல் மனுதாரர் மனுவில் தெரிவித்த புகார் குறித்து, சம்பந்தப்பட்ட அலுவலர் யாரும் ஆஜராகாததால், இப்புகார் தொடர்பாக எதிர்மனுதாரரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.01.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 13.01.2026 நாளிட்ட அழைப்பாணை மனுதாருக்கு நகலிட்டு, அனுப்பப்பட்டது.

9. எதிர்மனுதாரர் தன்னுடைய 30.01.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:–

“மனுதாரர் குறிப்பிட்டுள்ள கிருஷ்ணநகர் விரிவு பகுதியில் மனுதாரர் குறிப்பிட்டவாறு கிருஷ்ண நகர் பிரதான சாலை கடந்த ஆண்டு தார் சாலை அமைக்கும் பணி முடிவடைந்துள்ளது.

எனவே மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று இம்மனுவினை இரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.” எனத் தெரிவித்துள்ளார்.

10. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14 வார்டு 188–ன் இளநிலை பொறியாளர் 30.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

“மனுதாரர் 27.11.2024 நாளிட்ட புகார் மனு தொடர்பாக கிருஷ்ணா நகர் விரிவு பகுதியில், கிருஷ்ணா நகர் பிரதான சாலை 2025ம் ஆண்டு தார்சாலையாக போடப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது. அதன் புகைப்பட நகல் இத்துடன் இணைத்து சமர்ப்பித்துள்ளேன் என்ற விவரத்தை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.”

11. மனுதாரரின் மனு, கடிதம், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலரின் அறிக்கைகள் மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186–ல் உள்ள ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை குண்டும் குழியுமாக உள்ளதை சீரமைக்கவும், ராஜேஸ்வரி நகர் இரண்டாவது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால் மண் கொண்டு மூடப்பட்டுள்ளதை குறித்து நடவடிக்கை எடுக்கவும், சென்னை பெருநகராட்சி 14வது மண்டல அலுவலகம் அமைந்துள்ள புழுதிவாக்கம் பிரதான சாலை போக்குவரத்துக்கு படுமோசமாக உள்ளது குறித்து நடவடிக்கை எடுக்கவும், புதிதாக கடந்தாண்டு ராஜேஸ்வரி நகர் தெருவில் கட்டப்பட்டுள்ள மழைநீர் வடிகால் முறையாக வாட்டம் பார்த்து கட்டப்படாததால், அதில் மழைநீர் செல்லாமல் வடிகாலிலேயே தேங்கி தெருவிலேயே நிற்பது குறித்து நடவடிக்கை எடுக்கவும், வார்டு 188–ல் மடிப்பாக்கம் கிருஷ்ணா நகர் விரிவு பகுதியில் குடியிருப்புகளுக்கு இடையே உள்ள பகுதிகளில் சாலை போடப்படாமல் உள்ளது குறித்து நடவடிக்கை எடுக்கவும் கோரியிருப்பது மற்றும் மனுதாரர் 06.01.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணை அன்று மாண்பமை உயர்நீதிமன்றத்தில் தனக்கு வேலை இருந்ததால் விசாரணைக்கு வர இயலவில்லை என்றும், தான் அளித்த முறையீட்டு மனுவின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் கடிதம் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186–ல் உள்ள இராஜேஸ்வரி நகர் பகுதியில் உள்ள சாலைகள் அனைத்திற்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு விரைவில் புதிய தார் சாலை அமைக்கப்படும் என்பதும், இராஜேஸ்வரி நகரில் இரண்டாவது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மண் அகற்றப்பட்டு மழைநீர் செல்ல வழி செய்யப்பட்டுள்ளது என்பதும், புழுதிவாக்கம் பிரதான சாலை புதிய சாலை அமைக்கப்பட்டுள்ளது என்பதும், இராஜேஸ்வரி நகரில் கட்டப்பட்டுள்ள மழைநீர் கால்வாய் திட்ட ஆலோசனைகள் மூலம் முறையாக வாட்டம் அமைத்து கோட்ட உதவி பொறியாளர் கண்காணிப்பில் கட்டப்பட்டுள்ளது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 188–ல் உள்ள கிருஷ்ணா நகர் விரிவு பகுதியில் இருக்கும் கிருஷ்ணா நகர் பிரதான சாலை 2025ம் ஆண்டு தார்சாலையாக போடப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலரின் அறிக்கைகள் மற்றும் இளநிலை பொறியாளர்களின் வாக்குமூலங்கள் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186 மற்றும் வார்டு 188 ஆகிய பகுதிகளில் மனுதாரர் மனுவில் குறிப்பிட்ட புகார்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டது என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் இளநிலை பொறியாளர்கள் தங்களுடைய வாக்குமூலங்களில் தெரிவித்திருந்தாலும், மண்டலம் 14, வார்டு 186–ல் உள்ள இராஜேஸ்வரி நகர் பகுதியில் உள்ள சாலைகள் அனைத்திற்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தம் கோரப்பட்டு விரைவில் புதிய தார் சாலை அமைக்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் இளநிலை

பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, அத்தார் சாலையை விரைந்து அமைக்க உரிய நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.B. ரமேஷ்,
பிளாட் எண் 32,
ராஜேஸ்வரி நகர் பிரதான சாலை,
உள்ளகரம்,
சென்னை–600 091.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 664, புழுதிவாக்கம் பிரதான சாலை,
புழுதிவாக்கம்,
சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்